**ஜூன் – 20**

# TNPSC துளிகள்

- நீலகிரியின் கூடலூர் வனப் பிரிவில் யானைகளைக் கண்காணிப்பதற்காக தமிழ்நாடு வனத்துறையானது, வெப்பநிலை அளவு சார்ந்த வகை புகை படமெடுக்கும் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தியுள்ளன.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை ஒளியிழை இணைப்பு மூலம் ஒரு கிலோ மீட்டருக்கும் மிக அதிகமான தொலைவிற்கு என்று குவாண்டம் வலையமைப்பினைப் பயன்படுத்தி வெற்றிட அல்லது காற்று ஊடகத்திலான பாதுகாப்பான குவாண்டம் தகவல்தொடர்பு நுட்பத்தினைச் செயல் விளக்கிக் காட்டியுள்ளன.
- லக்னோ ஆனது யுனெஸ்கோ அமைப்பின் அறுசுவை உணவியலின் ஒரு படைப்பாக்க நகரம் பட்டத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரியதான ஆட்டோமொபைல் கதி சக்தி பல்நோக்குச் சரக்குப் போக்குவரத்து முனையம் ஆனது ஹரியானாவின் மானேசர் நகரில் உள்ள மாருதி சுசுகியின் உற்பத்தி மையத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்புத் துறை சார்ந்த இணைய வெளி முகமையானது, மிகச் சமீபத்தில் 'சைபர் சுரக்சா' என்ற விரிவான இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியை நடத்தியது.
- கேரள மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (KeSCPCR) ஆனது, ரேடியோ நெல்லிக்கா எனும் குழந்தைகளுக்கான பிரத்தியேக இணைய வானொலி நிலையத்தினைத் தொடங்கியுள்ளது.
- கஜகஸ்தானின் முதல் திட்டமிடப்பட்ட அணு மின் நிலையத்தை உருவாக்குவதற்கான சர்வதேச கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பிற்கு என்று ரஷ்யாவின் ரோசாட்டம் நிறுவனமானது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- பிரேசில் நாடானது, பிரிக்ஸ் அமைப்பின் 10வது பங்குதார நாடாக வியட்நாம் நாடு அதிகாரப் பூர்வமாக இணைந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- தமிழ்நாடு அரசானது நெல் கொள்முதல் விலையைச் சாதாரண நெல் ரகத்திற்கு ஒரு குவிண்டாலுக்கு 2,500 ரூபாயாகவும், ஒரு தரமான நெல் ரகத்திற்கு 2,545 ரூபாயாகவும் அறிவித்துள்ளது.
    - தற்போது பீகார் அரசானது ஒரு குவிண்டால் நெல்லுக்கு 3,500 ரூபாய் வழங்குகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## G.M. அக்பர் அலி குழு

- தமிழக மாநில அரசானது நீதிபதி (ஓய்வு) G.M. அக்பர் அலி தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது.
- இது ஆட்சேர்ப்பு/தேர்வுச் செயல்முறையின் மீதான அதன் தீர்ப்பின் ஒரு தாக்கத்தை ஆராய்ந்து, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிலிருந்து எழும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான சட்டப்பூர்வ வாய்ப்புகளை முன்மொழியும்.
- பாரம்பரியமாக, மாநில அரசானது 200 அம்ச (இட ஒதுக்கீடு) தேர்வுப் பட்டியல் என்ற முறையைப் பின்பற்றி, அதன் மூலம் அரசு நியமனங்களுக்கான அதன் தரவரிசைப் பட்டியல்களைத் தயாரித்து வந்தது.
- இந்த முறையின் ஒரு பகுதியாக, BC, BCM, MBC மற்றும் DNC, SC, மற்றும் ST பிரிவைச்

சேர்ந்த தேர்வர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

- இந்த முறையானது, அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பதவி உயர்வில் ஒரு சமமான வாய்ப்பினை வழங்குவதைக் கருத்தில் கொண்டு, சமூகப் பிரிவுகளுக்குள் பணி மூப்பு மற்றும் தகுதியை நிர்ணயித்துள்ளது.
- இருப்பினும், இந்த நடைமுறையை 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் மூலம் ரத்து செய்யக் கோரப்பட்டது.
- 2003 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதிக்குப் பிறகு TNPSC மூலம் நேரடியாக தேர்வு செய்யப் பட்ட தேர்வர்களின் பணி மூப்பு நிலையை, தேர்வுச் செயல்முறையில் TNPSC ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தகுதியின் அடிப்படையில் மட்டும் திருத்தப்பட வேண்டும் என்றும், இட ஒதுக்கீட்டு அடிப்படையில் அல்ல என்றும் நீதிமன்றம் மாநில அரசைக் கோரியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் நவம்பர் மாதங்களில், கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறையானது, தமிழ்நாடு மாநிலக் கருவூலக் கணக்குப் பணிகளில் (2007-2008) நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட கணக்கு அலுவலர்கள் தொடர்பாக TNPSC அளித்த தகுதிப் பட்டியலின்படி நுழைவு நிலை பணி மூப்புத் திருத்த உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.




## சிறுகடன் துறையில் நிலுவையில் உள்ள கடன்

| Microfinance Lending in Tamil Nadu: Key Statistics | |
|---|---|
| Parameter | Value |
| Gross Loan Portfolio (Dec 2024) | ₹53,300 crore |
| Share of National MFI Portfolio | 13.70% |
| Average Loan per Borrower | ₹ 26,600 |
| NBFC-MFI Market Share (National) | 37.30% |
| Small Finance Bank Market Share | 16.60% |
| MFI Loans Overdue >90 Days (Dec. 2024) | 6.10% |

- தமிழ்நாட்டில் சிறுகடன் துறையில் ஒரு வங்கிக் கணக்கிற்கு மிக அதிகபட்சச் சராசரி நிலுவைக் கடன் உள்ளது.

- முதலிடத்தில் உள்ள 10 மாநிலங்களுள், தமிழ்நாட்டில் ஒரு வங்கிக் கணக்கிற்கு அதிக பட்சமாக 31,131 ரூபாய் என்ற நிலுவைக் கடன் உடன் அதிகபட்ச நிலுவைக் கடனைக் கொண்டுள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து மேற்கு வங்க மாநிலத்தில் ஒரு வங்கிக் கணக்கிற்கு அதிகபட்சமாக 30,488 ரூபாய் கடன் நிலுவையில் உள்ளது.
- சிறு கடன் துறையில், பீகார் தொடர்ந்து மிக அதிக நிலுவைக் கடன் தொகை கொண்ட மாநிலமாக உள்ள ஒரு நிலைமையில் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- சிறுகடன் வழங்கீட்டு முறை இருப்பைக் கொண்ட மிகப் பழமையான மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும்.
- கடந்த காலத்தில் கடன் அளவு மற்றும் நிலுவையில் உள்ள கடன் தொகை ஆனது பொதுவாக வாடிக்கையாளர்களின் கணக்கு வைத்துள்ள காலம் மற்றும் அவர்களின் கடன் திருப்பிச் செலுத்தும் செயல்திறன் ஆகியவற்றின் காரணியாக இருந்தது என்பதோடு மேலும் ஒவ்வொருப் புதிய கடன் சுழற்சியிலும் ஒரு கடன் பெறுபவருக்கு அதிக கடன் தொகை கிடைக்கும்.
- எனவே இயல்பாகவே, தமிழ்நாட்டில் வாடிக்கையாளர்களின் கணக்கு வைத்துள்ள காலம் ஆனது மற்ற மாநிலங்களை விட மிக அதிகமாக உள்ளது என்பதோடு இது அதிக சராசரி நிலுவைக் கடன்களை குறிக்கிறது.
- 2024-25 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) ஆனது 17.23 லட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் சுமார் 2.78 லட்சம் ரூபாயாக இருந்தது.
- மேலும் இது தேசிய சராசரியான 1.69 லட்சம் ரூபாயை விட 1.6 மடங்கு அதிகமாகும் என்பதோடு தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் நான்காவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- இது இம்மாநிலத்தில் ஒரு கணக்கிற்கு நிலுவையில் உள்ள அதிக சராசரிக் கடனைப் பிரதிபலிக்கின்ற, சிறு கடன் பெறுபவர்களின் அதிக கடன் பெறும் ஒரு திறனையும் எடுத்துக் காட்டுகிறது.
- இருப்பினும், இது 28,285 ரூபாய் மதிப்பிலான அகில இந்திய சராசரிக் கடன் நிலுவைத் தொகையினை விட சற்று அதிகமாகவே உள்ளது.
- அதிக நிலுவைக் கடன்களைக் கொண்ட முதல் 10 மாநிலங்களில், பீகார், தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் கர்நாடகா ஆகியவை சராசரியை விட மிகவும் அதிகமான நிலுவைக் கடன் தொகையைக் கொண்டுள்ளன.
- இது பெரும்பாலும் சமீபத்திய மாதங்களில் மிகப்பெரிய அளவிலான கடன்கள் அதிக அளவில் வழங்கப்படுவதன் நீடித்தப் போக்கினால் ஏற்படுகிறது.
- கூடுதலாக, தமிழ்நாட்டில் சிறு கடன் நிறுவனத்தில் (MFI) கடன் வாங்குபவர்களின் அதிகரித்து வரும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக நிறைவுக் காலமானது இந்தப் போக்குக்கு மேலும் பங்களித்துள்ளது.
- தமிழ்நாட்டில் சிறு கடன் துறையின் மொத்த நிலுவைக் கடன் (GLP) ஆனது 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி 46,689 கோடி ரூபாயாக இருந்தது.

# தேசியச் செய்திகள்

## தார்த்தி ஆபா ஜன்பாகிதாரி அபியான் 2025

- இந்திய அரசானது, தார்த்தி ஆபா ஜன்பாகிதாரி அபியான் எனும் ஒரு திட்டத்தினைத்

தொடங்கியுள்ளது.

- இந்தப் பிரச்சாரம் ஆனது, பழங்குடியினர் அதிகம் காணப்படும் 549 மாவட்டங்களிலும், சுமார் 100,000+ கிராமங்கள் மற்றும் வாழ்விடங்களை உள்ளடக்கிய எளிதில் பாதிக்கப் படக் கூடிய பழங்குடியினக் குழுக்கள் (PVTG) அதிகம் வாழும் 207 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.
- இது ஜன்ஜாதிய கௌரவ் வர்ஷ் என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட மிகப்பெரியப் பழங்குடியின அதிகாரமளிப்புப் பிரச்சாரம் ஆகும்.
- இது ஆதார் அட்டை சேர்க்கைகள் மற்றும் புதுப்பிப்புகள், ஆயுஷ்மான் பாரத் சுகாதார அட்டை வழங்கல், ஜன் தன் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல் உள்ளிட்ட சில முக்கியமான உரிமைகள் மற்றும் அரசு சேவைகளுக்கான அணுகலை வழங்கும்.




## சர்வதேசப் பெரும்பூனை இனங்கள் கூட்டணியின் முதல் கூட்டம்




- சர்வதேசப் பெரும் பூனை இனங்கள் கூட்டணியின் (IBCA) முதல் கூட்டம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்தியப் பிரதமர் 2023 ஆம் ஆண்டு மைசூரில், புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் IBCA கூட்டணிக் குறித்து அறிவித்தார்.
- இந்திய அரசு ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையத்தின் மூலம் இந்தக் கூட்டணியினை நிறுவியது.
- IBCA என்பது ஏழு பெரும் பூனை இனங்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினைக்

கொண்ட 95 புலிகள் வாழ்விடம் கொண்ட நாடுகளின் கூட்டணியாகும்.

- ஏழு பெரும் பூனை இனங்களாவன: புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, சிவிங்கிப் புலி, ஜாகுவார் மற்றும் பூமா ஆகியனவாகும்.

## தொலைத்தொடர்பு சார் புத்தொழில் நிறுவனங்களுக்கான சமர்த் திட்டம்




- தகவல் தொடர்பு மேம்பாட்டு மையம் (C-DOT) ஆனது 'சமர்த்' திட்டத்தை அறிமுகப் படுத்தியது.
- இது தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கான ஓர் அதிநவீன தொழிற்காப்புத் திட்டமாகும்.
- முதல் கட்டத்தில் 18 புத்தொழில் நிறுவனங்கள் போட்டிச் செயல்முறை மூலம் முதல் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- இந்தப் புத்தொழில் நிறுவனங்களுக்கு என நிதி மானியம், முழுமையான வசதிகள் பொருத்தப் பட்ட அலுவலக இடம் மற்றும் டெல்லி மற்றும் பெங்களூரு வளாகங்களில் C-DOT மையத்தின் பல்வேறு ஆய்வக வசதிகளுக்கான அணுகல் ஆகியவை வழங்கப் படுகின்றன.
- "சமர்த்" தொழிற்காப்புத் திட்டம் ஆனது தொலைத்தொடர்புச் செயலிகள், இணைய வெளிப் பாதுகாப்பு, 5G/6G தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு, இணைய உலகம் (IoT) மற்றும் குவாண்டம் தொழில்நுட்பங்களில் செயலாற்றும் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களுக்கு ஒரு பெரும் முழுமையான ஆதரவை வழங்குகிறது.

## திருத்தப்பட்ட திட்ட ஆவணம் - பசுமை இந்தியா திட்டம்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆனது 2021-2030 ஆம் காலக் கட்டத்திற்கான திருத்தப்பட்ட ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- திருத்தப்பட்ட திட்ட ஆவணத்தில், அனைத்து மறுசீரமைப்பு நடவடிக்கைகளிலிருந்தும் இந்தியா 3.39 பில்லியன் டன் கார்பன் (உறிஞ்சுப் பகுதி) பிடிப்பினை அடைய முடியும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

- இதற்கு மதிப்பிடப்பட்ட சுமார் 24.7 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் காடு மற்றும் மரங்களின் பரப்பளவை அதிகரிக்க வேண்டும்.
- கூடுதல் காடு மற்றும் மரங்களின் பரவல் மூலம் 2.5 முதல் 3 பில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு சமமான கூடுதல் கார்பன் பிடிப்பினை உருவாக்குவதே தேசியப் பசுமை இந்தியா திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 2015-16 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன.
- திருத்தப்பட்ட ஆவணத்தின்படி, 2020-21 ஆம் ஆண்டு வரையில் சுமார் 11.22 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவு மரம் வளர்ப்பு பகுதியின் கீழ் சேர்க்கப் பட்டது.
- சதுப்புநிலங்கள் மற்றும் இந்திய இமயமலைப் பகுதியுடன் சேர்ந்து, ஆரவல்லி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்கள் போன்ற எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலப் பரப்புகளை மீட்டெடுப்பதில் அமைச்சகம் கவனம் செலுத்தும்.




# சர்வதேசச் செய்திகள்

## 113வது சர்வதேச தொழிலாளர் மாநாடு


- இந்த மாநாடு ஆனது, தொழிலாளர்களை உயிரியல் ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் முதல் சர்வதேச தொழிலாளர் தரநிலைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இது பணிச்சூழலில் உயிரியல்சார் ஆபத்துகளை சிறப்பு கவனம் கொண்டு நிவர்த்தி செய்யும் முதல் சர்வதேச செயற்கருவியாகும்.
- இந்த உடன்படிக்கை (C192) ஆனது அதன் உறுப்பினர் நாடுகள் ஆனது, தேசிய அளவில் கொள்கைகளை வகுத்து தொழில் துறைப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறது.
- அதில் உயிரியல் ஆபத்துகளுக்கு எதிரான தடுப்பு மற்றும் பாதுகாப்பு, விபத்துக்கள்

மற்றும் பல்வேறு அவசரநிலைகளைச் சமாளிப்பதற்கான தயார்நிலை மற்றும் எதிர் நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கவும் இது அழைப்பினை விடுத்தது.

- இந்த நிகழ்வின் போது 2006 ஆம் ஆண்டு கடல்சார் தொழிலாளர் உடன்படிக்கைக்கான ஏழு திருத்தங்களும் அங்கீகரிக்கப்பட்டன.
- இந்த மாநாட்டில் பாலஸ்தீனமானது உறுப்பினர் அல்லாத ஒரு பார்வையாளர் நாடாக பங்கேற்றது.




## பராக் மேகன் vs ஃபட்டா I எறிகணை





- ஈரானின் ஃபட்டா-1 எறிகணை தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேல் தனது புதிய வான்வழி பாதுகாப்பு அமைப்பான 'பராக் மேகன்' அல்லது 'Lightning Shield-மின்னல் கவசத்தை'

முதன்முறையாக செயல்படுத்தியது.

- இது பராக் MX எறிகணை பாதுகாப்பு அமைப்பின் சிறப்பு வடிவமாகும்.
- இது ஆளில்லா விமானங்கள், கப்பல் எறிகணைகள் மற்றும் உந்துவிசை எறிகணைகள் போன்ற பல்வேறு வான்வழியான அச்சுறுத்தல்களிலிருந்து கடற்படைக் கப்பல்களைப் பாதுகாப்பதற்காக கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இந்த அமைப்பு ஆனது, சார் 6 வழித் துணைக் கப்பல்கள் எனப்படும் மேம்படுத்தப் பட்ட இஸ்ரேலியக் கடற்படை கப்பல்களில் பயன்படுத்தப்படுகிறது.
- ஃபட்டா-1 என்பது ஒரு நடுத்தரத் தூர தாக்குதல் வரம்புடைய அதி மீயொலி உந்துவிசை எறிகணையாகும்.
- இஸ்ரேலின் இரும்பு கவசம் மற்றும் ஆரோ போன்ற மிகவும் சிறந்தப் பாதுகாப்பு அமைப்புகளையும் தாண்டி தாக்குவதற்காக வேண்டி இது மிகவும் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு ள்ளது.
- இந்த எறிகணையானது, மேக் 13 மற்றும் 15 ஆகிய வரம்பிற்கு இடையில் சுமார் 15,000 கிமீ/மணி வேகத்தை எட்டும் திறன் கொண்டது.
- இது தோராயமாக 1,400 கிலோமீட்டர் (சுமார் 870 மைல்கள்) வரையிலான தாக்குதல் வரம்பைக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஸ்பார்டேயஸ் மற்றும் சோனோய்டா




- தென்னிந்தியாவில் ஸ்பார்டேய்னே துணைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புதிய வகை குதிக்கும் சிலந்திகளை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அவை அவற்றினுடைய திறம் மிக்க வேட்டைத் திறன்கள் மற்றும் வலையமைத்துத் தாக்கும் உத்திகளுக்குப் பெயர் பெற்றவையாகும்.
- இந்தக் கண்டுபிடிப்பானது, முன்னதாக தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் மட்டுமே காணப்படுவதாக அறியப்பட்ட இந்தப் பேரினங்கள் இந்தியாவில் மிக முதல் முறையாக கண்டறிப்பட்டதைக் குறிக்கின்றன.
- சால்டிசிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்த இந்தச் சிலந்திகள், அவற்றின் கூர்மையான

பார்வை மற்றும் பெரும்பாலும் இரையை ஒத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மற்ற சிலந்திகளை திசை திருப்புகின்ற தனித்துவமான வேட்டை முறைகளுக்கு பெயர் பெற்றவையாகும்.

- கூடுதலாக, ஆப்பிரிக்காவில் மட்டுமே இருப்பதாக முன்னர் கருதப்பட்ட இந்த Sonoita cf. lightfooti என்ற இனமும் கர்நாடகாவில் கண்டறியப்பட்டது.
- தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் சில பிரதிகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- இந்த ஆய்வு நீண்டகாலமாக நிலவி வந்த வகைபிரித்தல் குழப்பத்தையும் தீர்த்துள்ளது.
- மேற்கு வங்காளத்தின் கங்காசாகரில் மார்பிஸ்ஸா கங்காசாகரென்சிஸ் இனம் 2005 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டு விவரிக்கப்பட்டது.
- இந்த இனமானது, ஒரு வரலாற்று ரீதியான அருங்காட்சியக மாதிரியை கவனமாக பரிசோதித்ததைத் தொடர்ந்து, 1900 ஆம் ஆண்டில் முதன்முதலில் விவரிக்கப்பட்ட ஓர் இனமான ஃபேசியஸ் ஃபிம்பிரியாட்டஸைப் போலவே உள்ளதாக உறுதிப்படுத்தப் பட்டது.
- இந்தக் கண்டுபிடிப்புகளுடன், இந்தியாவில் ஸ்பார்ட்டீனே துணைக் குடும்பத்தின் கீழான சிலந்தி இனங்களின் 10 பேரினங்களில் 15 இனங்களாக அதிகரித்துள்ளன.

# மாநிலச் செய்திகள்


## இந்தியாவின் முதல் கைபேசி அடிப்படையிலான இணைய வாக்களிப்பு முறை – பீகார்




- பீகார் மாநிலத் தேர்தல் ஆணையம் ஆனது ஆண்ட்ராய்டு அடிப்படையிலான ஒரு கை பேசியினைப் பயன்படுத்தி இணைய வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது.
- வாக்களிப்புச் செயல்பாட்டில் இந்தப் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்றுக் கொண்ட நாட்டின் முதல் மாநிலமாக பீகார் விளங்கும்.

- ஒட்டு மொத்த இணைய வாக்களிப்புச் செயல்முறையும் “e-Voting SECBHR” எனப்படும் கை பேசி செயலிகள் மூலம் செயல்படுத்தப்படும்.
- இந்தக் கைபேசி செயலியானது மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையம் (C-DAC) மற்றும் பீகார் மாநில தேர்தல் ஆணையத்தினால் உருவாக்கப்பட்டது.
- புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த வாக்காளர்கள், மாற்றுத் திறனாளி வாக்காளர்கள், கர்ப்பிணிப் பெண் வாக்காளர்கள், மிகவும் வயதானவர்கள் மற்றும் முதியோர்கள் மற்றும் கடுமையான நோய் வாய்ப்பட்ட வாக்காளர்கள் இணைய வழி வாக்குப்பதிவுச் செயல்முறையைப் பயன்படுத்தி தங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய முடியும்.
- இணைய வழி வாக்குப் பதிவு அமைப்பில் தொடர் சங்கிலித் தொழில்நுட்பத் தளம், அசைவைக் கண்டறிதல், முகப் பொருத்தம், நேரடி நிகழ்நேர முக ஆய்வு மற்றும் முக ஒப்பீடு போன்ற பல்வேறு இதில் அம்சங்கள் இருக்கும் என்பதால் இது வாக்களிப்புச் செயல்முறையினை பாதுகாப்பானதாக மாற்றும்.
- VVPAT என்ற EVM அம்சத்தைப் போலவே, இணைய வழியான வாக்குப்பதிவுச் செயல் முறையிலும் ஒரு தணிக்கை செயல்முறை வைக்கப்பட்டுள்ளது.
- இணைய வழியான வாக்குப்பதிவுச் செயல்முறையில் கிடைக்கும் தகவல்களின் படி, ஐரோப்பிய நாடான எஸ்டோனியா மட்டுமே இந்த முறையினை அறிமுகப்படுத்தி உள்ளது.

## ஜல் கங்கா சன்வர்தன் அபியான் முன்னெடுப்பு- மத்தியப் பிரதேசம்




- ஜல் கங்கா சம்வர்தன் அபியான் எனும் பிரச்சாரம் ஆனது, 2025 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியன்று ஷிப்ரா நதிக்கரையில் தொடங்கப்பட்டது.
- இது அம்மாநிலத்தின் நீர்நிலை அமைப்புகளை (ஆறுகள், குளங்கள், கிணறுகள், படிக் கிணறுகள் மற்றும் பல) பாதுகாத்து மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- கட்டுப்பாடற்ற நிலத்தடி நீர் உறிஞ்சுதல் இந்த ஆறு மற்றும் இதர பிற சிறிய ஆறுகளை வறண்டு போகச் செய்து, வேளாண்மையினைப் பாதித்தது.
- 'Ridge to Valley' கொள்கையைப் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்ட சில நீர் வளங்காப்பு கட்டமைப்புகள் மூலம், 33 கி.மீ நீளத்திற்கு தண்ணீர் சேகரிக்கப்பட்டுள்ளது.
- இதன் விளைவாக நதி தற்போது மீண்டும் பாய்கிறது.

## தல்லிகி வந்தனம் - ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, 'தல்லிகி வந்தனம்' என்ற புதிய நலத்திட்டத்தைத் தொடங்கி யுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாணவரின் தாய்க்கும் அல்லது பாதுகாவலருக்கும் ஒவ்வோர் ஆண்டும் 15,000 ரூபாய் வழங்கப்படும்.
- 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைவார்கள்.
- அரசாங்கம் இதனை "அனைத்து நலத்திட்டங்களின் தாய்" என்று அழைக்கிறது.





## உத்கல் கேசரி பரிதா வழக்கு – 2013

- முன்னாள் முதலமைச்சரும், போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான O. பன்னீர் செல்வத்திற்கு எதிராகப் போடிநாயக்கனூர் வாக்காளர் தாக்கல் செய்த மனுவை சபாநாயகர் M. அப்பாவு விசாரிக்க உள்ளார்.
- இது ஒடிசா சட்டமன்றச் சபாநாயகர் மற்றும் உத்கல் கேசரி பரிதா இடையிலான 2013 ஆம் ஆண்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் மூலம் மேற்கொள்ளப் பட்டது.
- இருப்பினும், இந்த நிலைப்பாடு ஆனது தகுதி நீக்கம் தொடர்பான 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற விதிகளுக்கு இணங்கவில்லை.
- இந்த விதிகள் ஆனது சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அத்தகையதொரு மனுவைச் சமர்ப்பிக்க முடியும் என்று வெளிப்படையாகக் கூறுகிறது.
- அந்த ஒடிசாவின் வழக்கில் கூட, நான்கு சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்வதற்கான மனுவைத் தாக்கல் செய்வதில் சபை உறுப்பினர் அல்லாத ஒருவர்

தலையிட்டு மனு வழங்குவதற்கான உரிமை குறித்து கருத்து எழுப்பப்பட்டது.

- ஆனால் உச்ச நீதிமன்றம் ஆனது சட்டசபை உறுப்பினர் மட்டுமல்லாமல், ஆர்வமுள்ள எந்தவொரு நபரும் சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்வதற்கான ஒரு மனுவை சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வர உரிமை உண்டு என்று கூறியது.
- இந்திய அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணையின் கீழ் சட்டசபை உறுப்பினர் தகுதி நீக்கம் செய்யப்படலாம்.
- தமிழ்நாட்டின் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், மனுக்கள் மூலம் குறிப்பிடப்பட வேண்டிய குறிப்புகள் என்ற தலைப்பிலான அந்த 6வது விதியானது யார் மனுவை முன் வைக்கலாம் என்பது தொடர்பான காரணிகளைக் கையாள்கிறது.
- இதன் துணை விதி (2) ஆனது "ஓர் உறுப்பினர் தொடர்பான மனுவை வேறு எந்தவொரு உறுப்பினரும் சபாநாயகருக்கு எழுத்துப்பூர்வமாக அளிக்கலாம்."
- இங்கு, வரையறைகள் என்ற தலைப்பிலான (2) து விதியின் படி, "உறுப்பினர்" என்ற சொல் ஆனது "தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்" என்று பொருள்படுகிறது.
- சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கம் ஆனது கடைசியாக 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- அப்போதையச் சட்டமன்ற சபாநாயகர் P. தனபால், அ.தி.மு.க. கட்சியின் 18 சட்டமன்ற உறுப்பினர்கள் மீது, அவர்கள் கட்சி உறுப்பினர் பதவியை "தானாக முன்வந்து கை விட்ட" காரணத்திற்காக தகுதி நீக்க நடவடிக்கையினை மேற்கொண்டார்.




## தான்யா.M மற்றும் கேரள மாநிலம் மற்றும் பிற அரசுகளுக்கு இடையிலான ஒரு வழக்கு

- குற்றவியல் வழக்குத் தொடரலுக்கு மாற்றாகவோ அல்லது பிணை உத்தரவுகளைத் தவிர்ப்பதற்காகவோ தடுப்புக் காவலின் மிகவும் அசாதாரணமான நடவடிக்கையைப் பயன்படுத்தக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- S.K. நஸ்னீன் மற்றும் தெலுங்கானா மாநில அரசு (2023) மற்றும் நெனாவத் புஜ்ஜி மற்றும் பிற தெலுங்கானா மாநில அரசு (2024) ஆகிய வழக்குகளை மேற்கோள் காட்டி, 'பொது ஒழுங்கு' மற்றும் 'சட்ட ஒழுங்கு' ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டை உச்ச

நீதிமன்றத்தின் தீர்ப்பு குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு கேரள மாநிலச் சமூக விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- இது தொடர்பான பிற முக்கிய உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள்
    - ரேகா மற்றும் தமிழ்நாடு மாநில அரசிற்கு இடையிலான வழக்கு (2011),
    - விஜய் நாராயண் சிங் மற்றும் பீகார் மாநில அரசிற்கு இடையிலான வழக்கு (1984),
    - இச்சு தேவி மற்றும் இந்திய ஒன்றியத்திற்கு இடையிலான வழக்கு (1980) மற்றும்
    - A.K. கோபாலன் மற்றும் சென்னை மாகணத்திற்கு இடையிலான வழக்கு (1950)
- தடுப்புக் காவல் ஆனது அரசியலமைப்பின் 22(3)(b)வது சரத்தின் கீழ் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- தடுப்புக் காவல் அதிகாரம் ஆனது 21 சரத்திற்கு அளிக்கப்பட்டுள்ள விதி விலக்காகும், எனவே, முதன்மைத் தீர்ப்பிற்கு விதிவிலக்காக, அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே இதனைப் பயன்படுத்த வேண்டும்.
- தடுப்புக் காவல் விதி என்பது அரசின் பொறுப்பில் உள்ள குறைவாகவே பயன்படுத்தப் பட வேண்டிய ஓர் அசாதாரண அதிகாரமாகும்.
- மேலும் இது, குற்றம்(குற்றங்கள்) செய்யப்படும் என்று எதிர்பார்த்து ஒரு தனிநபரின் சுதந்திரத்தைக் குறைக்கிறது என்பதால் சாதாரணச் சூழலில் அதைப் பயன்படுத்தக் கூடாது.
- ஒரு நபர் ஒரு தகுதி வாய்ந்த குற்றவியல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப் படும் போது, அந்த குற்றவியல் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட வேண்டிய அதே குற்றச்சாட்டின் அடிப்படையில் தடுப்புக் காவல் உத்தரவின் செல்லுபடித் தன்மையை ஆராய்வதில் அரசு மிகுந்த எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இஸ்ரோ விஞ்ஞானி நெல்லை சு.முத்து

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (இஸ்ரோ) முன்னாள் அறிவியலாளர் / விஞ்ஞானி நெல்லை சு.முத்து சமீபத்தில் காலமானார்.
- அவர் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் மூத்த அறிவியலாளராகப் பணியாற்றினார்.
- அவர் மலேசியாவின் உலகத் தமிழ்க் கவிஞர்கள் சங்கத்தினால் வழங்கப் படும் கவி மாமணி விருதைப் பெற்றவர் ஆவார்.

- அறிவியல், குழந்தைகள் இலக்கியம், கவிதை, வரலாறு, மொழிபெயர்ப்பு போன்ற சில தலைப்புகளில் 70க்கும் மேற்பட்டப் புத்தகங்களை எழுதியுள்ளார்.
- அவரது நான்கு புத்தகங்களுக்குத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த புத்தக விருது மற்றும் சிறந்த ஆசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டன.
- அவரது 'விண்வெளி 2057' (SKY 2057) என்ற புத்தகம் ஆனது 2000 ஆம் ஆண்டிற்கான கணிதம், வானியல், இயற்பியல் மற்றும் வேதியியல் பிரிவுகளில் சிறந்தப் புத்தக விருதை வென்றது.
- மற்றொருப் புத்தகமான 'அறிவூட்டும் விஞ்ஞான விளையாட்டு' (அறிவை வழங்கும் அறிவியல் தந்திரங்கள்), 2004 ஆம் ஆண்டிற்கான குழந்தைகள் இலக்கியப் பிரிவில் சிறந்தப் புத்தக விருதை வென்றது.
- 'ஐன்ஸ்டீனும் அண்டவெளியும்' (ஐன்ஸ்டீனும் விண்வெளியும்) என்ற புத்தகம் ஆனது 2005 ஆம் ஆண்டிற்கான வாழ்க்கை வரலாறு மற்றும் மிகவும் தனிப்பட்ட வரலாற்றுப் பிரிவுகளில் சிறந்த புத்தக விருதை வென்றது.
- அவர் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் A.P.J. அப்துல் கலாம் அவர்களுடன் பணி ஆற்றினார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★